# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.22/2022** நாள் : 15.06.2022

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை உரிய பாதுகாப்போடு மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஸ் குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை உரிய பாதுகாப்போடு மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஸ் குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.06.2022) சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மேலாண்மை இயக்குநர் தெரிவித்ததாவது:-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.241.36 கோடி மதிப்பீட்டில் மணலி, சின்னசேக்காடு, காரம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக முக்கிய சாலைகளில் பிரதான குழாய்கள் பதித்தல், இயந்திர நுழைவாயில்கள் அமைத்தல் மற்றும் வீட்டிணைப்பு வழங்குதல் உள்ளிட்ட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குறிப்பாக பிரதான குழாய்கள் பதிப்பதற்கான பணிகள் நடைபெறும்போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இயந்திர நுழைவாயில்கள் அமைக்கப்படும் இடங்களில் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் எடுக்கவேண்டும். சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பணிகள் நடைபெறுவதை உறுதி செய்ய

வேண்டும். பணிகள் நடைபெறுவதற்காக தோண்டப்பட்ட பள்ளத்தைச் சுற்றி தடுப்பு பலகைகள் மற்றும் அறிவிப்பு பலகைகள் வைக்க வேண்டும்.

மேலும், பணிகள் நிறைவுற்ற பின்னர் பிரதான குழாய்கள் பதிப்பதற்காக சாலைகளில் தோண்டப்பட்ட பள்ளங்களை முறையாக மூடி வாகனங்கள் செல்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ளும்பொழுது தகுந்த பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்த வேண்டும். பணிகள் நடைபெறும் இடங்களில் இரவு நேரங்களில் ஒளிரும் தகவல் பலகைகள் வைக்கப்படுவதோடு பணியாளர்கள் ஒளிரும் உடைகள் அணிந்து பணிபுரிவதை உறுதி செய்ய வேண்டும்.

பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறும் இடங்களுக்கு சம்பந்தப்பட்ட கள அலுவலர்கள் நேரடியாக சென்று ஆய்வு செய்து உரிய பாதுகாப்போடு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும். திடீர் தணிக்கைகள் மேற்கொள்ளும்பொழுது பாதுகாப்பு பணிகளில் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்தின்மீது உரிய சட்ட விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை மேற்கொண்டுவரும் அனைத்து ஒப்பந்ததாரர்களும் வாரியத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை தொய்வின்றி செயல்படுத்தி உரிய கால அளவிற்குள் அனைத்து பணிகளையும் முடித்திடுமாறு மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், செயல் இயக்குநர் திரு.எஸ்.இராஜ கோபால் சுங்காரா, இ.ஆ.ப., அவர்கள், வாரிய உயர் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்